8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

37. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

38. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104 (4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

72. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

73. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

74. வேளாண்மைத் துறை பற்றிய 'மக்கள் சாசனம்'. (தமிழ், ஆங்கிலம்)

75. பள்ளிக் கல்வித் துறையின் "செயல்முறைகள் மற்றும் புள்ளிவிவரம், 2012–2013" என்கிற சிறு நூல். (தமிழ்)

76. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)

77. தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)